**வெப்ஸ்டர் தெரு, டான்டெனாங்,** நவம்பர் 2023

# வெப்ஸ்டர் தெரு தொடருந்துக் கடவை அகற்றும் திட்டம்

LEVEL CROSSING REMOVAL PROJECT

## கிரான்போர்ன் மற்றும் பேகன்ஹாம் வழித்தடங்களில் உள்ள 27 தொடருந்துக் கடவைளை அகற்றி, தடை வாயில்களை அகற்றுகின்றோம், மேலும் மெட்ரோ சுரங்கப்பாதை திறக்கும்போது ஒவ்வொரு வாரமும் 121,000 பயணிகளுக்கான இடத்தை நாம் உருவாக்குகிறோம்.

டான்டெனாங்கின் வெப்ஸ்டர் தெருவில் உள்ள ஆபத்தான மற்றும் நெரிசலான தொடருந்துக் கடவையை அகற்றுகின்றோம்.

தொடருந்துக் கடவையூடு வாகனங்கள் செல்லும் பாதையை மூடிவிட்டு, பிரின்சஸ் ஹைவே-லான்ஸ்டேல் தெருவை செல்டென்ஹாம் மற்றும் ஹம்மண்ட் சாலைகளை இணைக்கும் வகையில் தொடருந்துப் பாதையின் கீழ் ஒரு புதிய பாதையை உருவாக்குவது வெப்ஸ்டர் தெருவிற்கான சிறந்த தீர்வாக இருக்கும் என தொழில்நுட்ப மற்றும் பொறியியல் மதிப்பீடுகள் கணிப்பிட்டுள்ளன.

இந்த தொடருந்துக் கடவையை அகற்றுவது ஓட்டுநர்கள், பாதசாரிகள் மற்றும் மிதிவண்டி ஓட்டுபவர்களுக்குப் பாதுகாப்பை மேம்படுத்துவதோடு, எதிர்கால வளர்ச்சிக்கு இப்பகுதியை தயார்படுத்தும்.

## தொடருந்துக் கடவையை மூடிவிட்டு புதிய பாதை இணைப்பை உருவாக்குதல்

டான்டெனாங்கில் மக்கள் மேலும் சிறப்பாகப் பயணிப்பதற்காக தொடருந்து பாதையின் கீழ் புதிய சாலை ஒன்றை உருவாக்குகிறோம். புதிய இணைப்புப் பாதை நெரிசலைக் குறைக்கும், மேலும் நம்பகமான பாதை வலையமைப்பை உருவாக்கும் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தும்.

### கிழக்கில் இருந்து மேற்கு நோக்கிய ஒரு புதிய இணைப்பு

செல்டென்ஹாம் மற்றும் ஹம்மண்ட் சாலைகளின் தற்போதைய குறுக்குச் சந்திப்பை, தொடருந்துப் பாதையின் கீழ் தோண்டுவதன் மூலம் ஒரு புதிய பாதை ஒன்றைப் பிரின்ஸ் ஹைவே-லான்ஸ்டேல் தெருவுடன் இணைப்போம்.

மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நிலக்கீழ் வழியாகப் பயணிக்கும் வாகனங்கள், பிரின்சஸ் ஹைவே-லான்ஸ்டேல் தெருவில் இடது மற்றும் வலதுபுறமாகத் திரும்பலாம். சமிக்ஞை பொருத்தப்பட்ட குறுக்குச் சந்தி

### பாதுகாப்பான மற்றும் அமைதியான வெப்ஸ்டர் தெரு

தொடருந்துக் கடவை மூடப்பட்டதால், வெப்ஸ்டர் தெருவில் குறைவான வாகனங்கள் பயணிக்கும், மேலும் கனரக வாகனங்கள் குடியிருப்பு தெருக்கள் மற்றும் டான்டெனாங் மத்திய வணிகப் பகுதியில் (CBD) இருந்து மாற்றப்படுவதால், அங்கு வசிக்கும் மக்களுக்கு அது அமைதியையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தும்.

வெப்ஸ்டர் தெருவின் மேற்கு முனையை ஹாமண்ட் மற்றும் பிரையன்ட்ஸ் பாதைகள் வழியாக மக்கள் அணுக முடியும் மற்றும்வெப்ஸ்டர் தெருவின் கிழக்கு முனையை பிரின்சஸ் நெடுஞ்சாலை-லான்ஸ்டேல் தெரு வழியாக அணுக முடியும்.

வெப்ஸ்டர் தெருவில் பாதசாரிகள் தொடருந்துப் பாதையின் ஒரு பக்கத்திலிருந்து மறுபுறம் கடந்து செல்ல முடியும், இருப்பினும் இந்த வழித்தடத்தின் அமைவிடத்தைத் தீர்மானிப்பதற்கான பணிகள் இன்னமும் நடைபெற்று வருகின்றன.

### தாமஸ் தெருவில் ஏற்படுகின்ற மாற்றங்கள்

தாமஸ் தெருவானது ஊடுசெல்ல முடியாத பாதையாகவும் (no-through road) ஃபாஸ்டர் தெரு வழியாக அணுக்கூடியதாகவும் மேலும் சாலையின் முடிவில் திரும்புவதற்கு புதிய பகுதியுடையதாகவும் மாற்றப்படும்.



பிரின்சஸ் நெடுஞ்சாலை-லான்ஸ்டேல் தெருவுடன் புதிய சாலைக் கீழ் வழித்தடம் இணையும் புதிய குறுக்குச் சந்தி. வரை கலைஞரின் உருவாக்கம், மாற்றத்திற்கு உட்பட்டது.

**புதிய தகவல்களைப் பெறுவதற்குப்**
levelcrossings.vic.gov.au **இல் பதிவு செய்யவும்**

VICTORIA'S BIG BUILD




*வெப்ஸ்டர் தெரு, டான்டெனாங். திட்ட வடிவமைப்பு மேலோட்ட வரைபடம்*

# திட்டக் காலவரிசை

2025 இல் தொடருந்துக் கடவை உள்ள வெப்ஸ்டர் தெருவை மூடுவோம். மேலும் 2028க்குள் புதிய சாலைக் கீழ் வழித்தடம் திறக்கப்படும்.

## நாங்கள் உங்கள் மொழியில் பேசுகிறோம்

உங்கள் மொழியில் திட்டத் தகவலை அணுகுவதற்கு உதவும் மொழிபெயர்ப்புச் சேவைகள் எங்களிடம் உள்ளன.

உங்கள் மொழியில் மொழிபெயர்ப்பு சேவைகளை அணுக **9209 0147** என்ற எண்ணை அழைக்கவும்.

திட்டத் தகவல்களைத் தமிழில் பார்வையிடுவதற்கு
**levelcrossings.vic.gov.au/webster-tamil**

### 2018
– தொடருந்துக் கடவை அகற்றும் திட்டம் அறிவிக்கப்பட்டது

### 2022 முதல் 2023 இறுதி வரை
– தள ஆய்வுகள், போக்குவரத்து ஆய்வுகள் மற்றும் திட்டமிடல் வேலைகள்

### நவம்பர் 2023
– கருத்து வடிவமைப்புகள் வெளியிடப்பட்டன
– சமூக அறிவுரை கோரல்
– தள ஆய்வுகள் தொடர்கின்றன

### 2024
– இறுதி வடிவமைப்புகள் வெளியிடப்பட்டன
– மேலும் சமூக ஈடுபாடு
– ஆரம்பக் கட்ட கட்டுமானப் பணி

### 2025
– முக்கிய கட்டுமானம் தொடங்குகிறது
– தொடருந்துக் கடவை அகற்றப்பட்டது

### 2028
– புதிய சாலைக் கீழ் வழித்தடம் திறக்கப்பட்டது

** காலவரிசை மாற்றத்திற்கு உட்பட்டது*


**levelcrossings.vic.gov.au**
contact@levelcrossings.vic.gov.au
For languages other than English, please call 9209 0147.

1800 105 105 (call anytime)

Please contact us if you would like this information in an accessible format. If you need assistance due to a hearing or speech impairment, visit **relayservice.gov.au**


VICTORIA State Government

WPA10131